**செய்தி வெளியீடு எண்:111** **நாள்: 24.02.2017**

**<u>செய்தி வெளியீடு</u>**

# தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்

பொருள் : தமிழ்நாட்டில் வானூர்திகள் உதிரி பாகங்கள் உற்பத்தி தொழில்களை மேம்படுத்துவதற்கான நடவடி,க்கைகள் குறித்து.

********

1. மாநிலத்தில் வானூர்தி உற்பத்தி சார்ந்த தொழில் துறையின் மேம்பாட்டிற்க்காக அரசு வழிகாட்டுதலின்படி டிட்கோ நிறுவனம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. ஸ்ரீபெரும்புதுாரில் உள்ள சிப்காட் தொழிற் பூங்காவில் 250 ஏக்கர் நிலப்பரப்பில் (600 ஏக்கர் விரிவாக்கம்) அமைக்கப்பட்டு வரும் வானூர்தி தொழிற் பூங்காவானது இந் நடவடிக்கைகளில் ஒன்றாகும்.

2. **தற்போதைய நிலைமை**

   (அ) தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திலிருந்து இப்பூங்காவிற்கான சுற்றுச் சூழல் அனுமதியை சிப்காட் நிறுவனம் ஏற்கெனவே பெற்றுள்ளது.

   (ஆ) சிப்காட் நிறுவனம் நில மேம்பாட்டுப் பணியை துவங்கி மேற்கொண்டு வருகிறது.

   (இ) இப்பூங்காவில் உட்புறசாலை, நீர் வழங்கல் வசதி, வடிகால் வசதி, மற்றும் தகவல் தொடர்பு வசதிகள் போன்ற அடிப்படை உட்கட்டமைப்பு பணிகளுக்காக ரூ.30 கோடியை சிப்காட் நிறுவனம் ஒதுக்கியுள்ளது.

   (ஈ) மேற்குரிய பணிகளை சிப்காட் நிறுவனம் விரைவில் மேற்கொள்ளவிருக்கிறது. இப்பணிகளை மேற்கொள்வதற்காக ஒப்பந்தகாரரை தேர்வு செய்யும் பணி நடைப்பெற்று வருகிறது.

   (உ) இதுவரை 14 வானூர்தி உதிரி பாகங்கள் தயாரிப்பு நிறுவனங்களுக்கு சிப்காட் இப்பூங்காவில் இடம் ஒதுக்கி உள்ளது. மேலும் 7 நிறுவனங்கள் இப்பூங்காவில் நிலம் வேண்டி டிட்கோவை அனுகியுள்ளனர்.

3. இப்பூங்காவில் டிட்கோ நிறுவனம் 11 ஏக்கரில் வானூர்தி உதிரி பாகங்கள் தயாரிக்கும் நிறுவனங்களுக்காக உயர் கணினி பொறியியல் மற்றும் வடிவமைப்பு மையம் (Advanced Computing & Design Engineering Centre) ஒன்றினை சுமார் 350 கோடி முதலீட்டில் அமைத்து வருகிறது. மேலும் டைடல் பார்க் நிறுவனம் 12 ஏக்கர் நிலப்பரப்பில் பல் அடுக்கு உற்பத்தி கூடம் ஒன்றினையும் இப்பூங்காவில்அமைக்க உள்ளது. இதற்க்கான கட்டுமான பணிகள் ஜூன்/ஜூலை–யில் தொடங்கும் என எதிப்பார்க்கப்படுகிறது.

**பெங்களூரில் நடைப்பெற்ற Aero India 2017–ல் டிட்கோவின் பங்கேற்ப்பு:**

4. மாநிலத்தில் உள்ள வானூர்தி தயாரிப்பு தொழிற் சார்ந்த நிறுவனங்களை ஊக்குவிக்கும் நோக்கில் டிட்கோ நிறுவனம் தமிழ்நாட்டில் அமைந்துள்ள வானூர்தி உற்பத்தி சார்ந்த தொழிற் நிறுவனங்களை ஒருங்கிணைத்து சமீபத்தில் பெங்களூரில் நடைபெற்ற Aero India 2017 கண்காட்சியில் பங்கேற்றது. இக்கண்காட்சியில் டிட்கோ நிறுவனம் பெரிய அளவில் 187 சதுர மீட்டர் கண்காட்சி இடத்தை எடுத்து அதில் கீழ்கண்ட 11 வானூர்தி உதிரிபாகங்கள் தயாரிக்கும் நிறுவனங்களும் தங்களது உற்பத்தி திறன்களை காட்சிப்படுத்த இணைந்தனர்.

| | |
|---|---|
| 1. லக்ஷ்மி மெஷின் ஒர்க்ஸ் லிமிடெட் (LMW) கோயம்புத்துார் | 7. சென்டர் ஃபார் ஏரோ ஸ்பேஸ் ரிசர்ச் அண்ணா யுனிவர்சிட்டி (MIT) கேம்ப்பஸ், சென்னை |
| 2. சேலம் ஏரோஸ்பேஸ் இன்ஜினியர்ஸ் லிமிடெட், சேலம் | 8. மெட்டாலிக் பெல்லோஸ் சென்னை |
| 3. யூக்கால் ஜாப் சிஸ்டம்ஸ் லிமிடெட், சென்னை | 9. வின்மின் ஏரோ ஸ்பேஸ் சென்னை |
| 4. வால்மேட் இன்ஜினியரிங் பிரைவேட் லிமிடெட் சென்னை | 10. எம்டிஏபி (MTAB) பிரைவேட் லிமிடெட் சென்னை |
| 5. சுந்தரம் பாஸ்ட்னர்ஸ் லிமிடெட், சென்னை | 11. டைடல் பார்க் லிமிடெட், சென்னை |
| 6. ஸ்ரீ ஜெயசூரியா எண்டர்பிரைஸ், சென்னை | |

5, பல்வேறு வானூர்தி தொழிற்சார்ந்த நிறுவனங்களை ஒருங்கிணைத்து டிட்கோவின் இந்த கூட்டு அனுகுமுறை தமிழ் நாட்டிற்க்கு பல வானூர்தி தொழிற் நிறுவனங்களை ஈர்ப்பதற்க்கு ஒரு சாதகமான சூழலை ஏற்படுத்தும்.

**முதன்மை செயலாளர் மற்றும் கூடுதல் செயலாளர் தொழிற்துறை அவர்களின் வானூர்தி நிறுவனங்களுடனான சந்திப்பு:**

6, திரு. விக்ரம் கப்பூர் ஐ.ஏ.எஸ்., முதன்மை செயலாளர், தொழிற்துறை, திரு. எம்.எஸ். சண்முகம் ஐ.ஏ.எஸ்., கூடுதல் செயலாளர் தொழிற்துறை மற்றும் திரு. பி. இளங்கோவன், மேலாண் இயக்குநர், டைடல் பார்க் முதுநிலை பொது மேலாளர் டிட்கோ ஆகியோர் Aero India கண்காட்சியில் கலந்து கொண்டு கீழ்கண்ட நிறுவனங்களின் உயர்மட்ட நிர்வாகிகளை சந்தித்தனர்.

1. பெல் எலிகாப்ட்டர் ஏசியா பிரைவேட் லிமிடெட்
2. ப்ரைட் விட்னி இந்தியா ட்ரைனிங் சென்டர்
3. டாட்டா பாட்டர்ன்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்

4. ராக்வெல் கோலின்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்
5. லாக்ஹூட் மார்டின் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்
6. சிகோர்ஸ்கி ஏர்கிராப்ட் கார்ப்போரேஷன்
7. யு எஸ் – இந்தியா கோ–ஆப்பரேஷன் புரோகிராம்
8. ஹனிவெல் இந்தியா
9. ரேத்யோன் இன்டர்நேஷ்னல் இங்க.
10. ஒஸ்கோஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட்
11. ஈடான் டெக்னாலஜீஸ் லிமிடெட்
12. சுகோய் அவியேஷன் ஹோல்டிங் கோ
13. டாசால்ட் சிஸ்டம்ஸ்
14. ஏரோஸ்பேஸ் வால்ஸ்
15. சஃப்ரான் ஏர்கிராப்ட் என்ஜின்ஸ்
16. வெல்ஷ் கவர்மென்ட்
17. இந்துஸ்தான் ஏரோனாடிக்ஸ் லிமிடெட்

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**